

## இறுதிச் செபம்:

மற்றுமொரு அதிச உறுப்பினர் ஒருவரை நிறைவு செபம் செய்ய அழையுங்கள்.

## முடிவு பாடல்:

உலகிற்கு ஒளியாய் உயிருக்கு வழியாய்
துலங்கிடும் உமக்கே இறைவா
நன்றி நன்றி இறைவா நன்றி
நன்றி கூறுகின்றோம் (2)

1.
இயேசுவின் குரலை இதயத்தில் கொண்டு
இணையில்லா பலியில் இறைவனை உண்டு (2)
சென்றிடும் வழியில் சொல்லிடும் மொழியில் ஆ...2
நின்றிட அழைத்தோம் நிற்பாய் தினமும்

உண்மை வழியை உலகுக்குக் காட்ட
உலகத்தை அன்பால் ஒன்றாய்த் திரட்ட (2)
அக இருள் அகற்றி இறையருள் புகுத்த ஆ.. 2
அன்புடன் அளித்தோம் எம்மையே உமக்கு





*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

செப்டம்பர் 2021

# அதிசசிந்தனை

# அனைத்துலகும் ஆண்டவரைப் போற்றுக!

நிகழ்வு: **உலகப் படைப்பின் அக்கறை நாள்**

சமூக ஊடகப் போக்கு: **#careforcreation**




## முன்னுரை:

இந்த ஆண்டு நாம் எதிர்நோக்கு, நம்பிக்கை, வாழ்தல் மற்றும் அளித்தல் என்னும் கருப்பொருளைப் பற்றிச் சிந்தித்துவருகிறோம். வருகின்ற நான்கு மாதங்களும் பிறருக்கு எதிர்நோக்கைத் தருதலைப் பற்றி நாம் கவனம் செலுத்தவுள்ளோம்.

இந்த மாதம் நம்முடைய கருப்பொருள் “அனைத்துலகும் ஆண்டவரைப் போற்றுக”. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால். திருத்தந்தையின் “லாவ்டாதோ சி என்னும் சுற்றுமடல் 2015 ஆம் ஆண்டு வெளியானதிலிருந்து செப்டம்பர் மாதத்தின் முதல்நாள் படைப்புகளுக்கு அக்கறைக் காட்டும் உலக இறைவேண்டல் நாளாகவும், படைப்பின் பருவகாலத்தின் தொடக்கமாகவும் பின்பற்றப்படுகிறது. மேலும் அக்டோபர் 4 ஆம் தேதி புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவோடு இந்தவிழா நிறைவு காண்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் படைப்பின் கடவுள் மீது தங்கள் நம்பிக்கையைப் புதுப்பித்துக்கொள்வதோடு, நம்முடைய பொதுஇல்லமான பூமிக்கு அக்கறைகாட்டவும் பணி செய்கிறார்கள்.

## தொடக்கச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை ஆரம்ப செபம் செய்ய அழையுங்கள்

## தொடக்கப்பாடல்:

ஆண்டவரை நான்
போற்றிடுவேன் என்றும்
ஆண்டவரை நான் போற்றிடுவேன் (2)

1. ஆண்டவரை நான் போற்றிடுவேன்
   என்றும்
   அவர் புகழை நானும் பாடிடுவேன் (2)
   என் ஆன்மா அவரில்
   பெருமைகொள்ளும்
   எளியவர் இதைக் கேட்டு
   மகிழ்வாராக - 2

2. ஆண்டவர் நம்பி வாழ்வோரை சுற்றி
   ஆண்டவர் தூதர் என்றும்
   காத்திடுவார் (2)
   ஆண்டவர் எவ்வளவோ இனியவரே
   – 2 என்று
   சுவைத்துப் பாருங்கள் – 2
   ஆண்டவர் எவ்வளவோ இனியவரே
   என்று

## உரையாடல்:

### Message by Pope Francis, 2020.

அனைத்துக்கும் ஆதாரமாகவும் தோற்றமாகவும் இருக்கும் படைத்தவரோடு நாம் இணக்கமாக இல்லாவிட்டால், நாம் அவருடைய படைப்புகளோடு இணக்கமாக வாழமுடியாது. திருத்தந்தை 16 ஆம் பெனடிக் கவனித்தபடி, “மிருகத்தனமான நுகர்வு எங்கு தொடங்குகிறதோ, அங்கு கடவுள் காணாமல் போகிறார். அங்கு பொருள் மட்டுமே முக்கியமாகப்படுகிறது. அனைத்தும் வெறுமனே நமது சொத்துகள் என்ற நிலையில் நாம் தான் இதற்கு இறுதி அளவீடாக இருக்கிறோம். (பொல்சானா – பிரசனொன் மறைமாவட்டத்தின் அருட்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் மற்றும் குருமட மாணவர்களோடு நடைபெற்ற கூட்டத்தின் செய்தி – ஆகஸ்ட் 6, 2008)

குறிப்பாக, இந்தப் படைப்பின் பருவகாலத்தில், உருவாக்கப்பட்ட இந்த உலகின் ஓசையைக் கவனத்துடன் கேட்போம். இந்த உலகம் கடவுளின் மாட்சியை வெளிப்படுத்தவும். அதனுடைய அழகில் அனைவரும் இறைவனைக் கண்டறியவும் மீண்டும் அவரிடம் திரும்பவும் உதவி செய்யும். (குறிப்பு: புனித பொனவெந்தர் – II வரிகள் 1,2,2,.1– நிறைவு: ப்ரெபிலொக்யும் II 5.11) நாம் உருவான இந்த உலகம் தியானிக்கவும், இறைவேண்டல் செய்யும் இடமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. கடவுள் கொடுத்த அழகியல் மற்றும் சிந்திக்கும் உணர்வை தட்டியெழுப்புவோம். (க்யூரிடா அமேசொனியா, 56)



**உங்களுடைய எண்ணங்களை அதிச உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள் :**

- மேற்குறிப்பிட்டுள்ள பகுதி உங்களுக்கும் இன்றைய திருஅவைக்கும் உணர்த்துவது என்ன?
- ஒருவர் மற்றவரோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

## இறைவார்த்தை:

### உரோமையர் 8: 18-21

இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன். இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது. ஏனெனில், படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது; தானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை; அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று. எனினும் அது எதிர்நோக்கை இழந்த நிலையில் இல்லை.

அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது

## சிந்தனைக்கு:

- இறைவார்த்தையை சத்தமாக வாசித்து திறந்த மனதுடன் செவிமடுப்போம்
- இறைவார்த்தை அல்லது வாக்கியம் உங்கள் உள்ளத்தைத் தொடும்வரை மீண்டும் அமைதியில் வாசிப்போம்.
- கேளுங்கள்: இந்த இறைவார்த்தை அல்லது வாக்கியத்தின் வழியாக தூய ஆவியார் உங்களுக்கு சொல்லவிரும்புவது என்ன?

## பகிர்வு:

- உங்கள் உள்ளத்தைத் தொட்ட இறைவார்த்தை அல்லது வாக்கியத்தின்வழி தனிப்பட்ட வகையில் ஆண்டவர் உங்களுக்கு என்ன கூறுகிறார் என்பதை 3-4 பேர் கொண்ட சிறிய குழுவில் பகிர்ந்து கொள்ளவும்.

## செயல் நடவடிக்கை:

- தனிமனிதனாக, குடும்பமாக, மற்றும் அதிச க்களாக. பிறருக்கு எதிர்நோக்கைத் தரவும், படைப்புகளுக்கு அக்கறையும் காட்டும் வகையில் செயல்படுத்தக்கூடிய செயல் நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.